# TNPSC GROUP II & IV VAO POLITY MATERIAL

## இந்திய அரசியலமைப்பு

### அரசியலமைப்பு விளக்கம்

### அரசியல்:

- அரசியல் என்ற சொல்லை முதன் முதலாக பயன்படுத்தியவர் - அரிஸ்டாட்டில் [ கிரேக்கம் - கி.மு. 384 - 322]
- அரிஸ்டாட்டில் அரசியல் அறிவியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்
- அரசியல் [ POLITICAL ] என்ற சொல் கிரேக்க சொல்லான POLIS என்ற சொல்லிலிருந்து வந்தது
- போலீஸ் என்ற கிரேக்க சொல்லிற்கு நகர அரசு என்று பொருள்

### அரசியல் அறிவியல்

- அரசியல் அறிவியல் என்ற சொல்லை உருவாக்கியவர் ஜூன் போர்டின் [ பிரஞ்சு நாட்டு தத்துவ ஞானி ]
- ஜூன் போர்டின் நவீன இறையாண்மை கோட்பாட்டின் தந்தை எனக் அழைக்கப்படுகிறார்
- அரசியல் அறிவியல் என்றால் மனிதன் எவ்வாறு தன்னை ஆளுகிறான் என்பதை பற்றி படிக்கும் படிப்பு ஆகும்

### அரசு:

- அரசு என்ற சொல்லை முதன் முதலாக பயன்படுத்தியவர் - நிக்கோலோ மாக்கியவல்லி [ நூல் - **இளவரசன் ]**

### தத்துவ ஞானிகளின் சிந்தனையில் அரசியலமைப்பு:

#### அரிஸ்டாட்டில் [ நூல் - அரசியல் ]




- அரசியல் என்பது அரசுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள உறவு முறைகளைப் பற்றி அறிந்துகொள்வதாகும்
- தொடக்ககாலத்தில் அரசியல் பேசும் இடமாக இருந்தது பேராலயம் ஆகும்.
- மனிதனின் உயிர்வாழ்தலின் நோக்கம் மற்றும் பொருளே மகிழ்ச்சியை தேடுவதாகவும்
- தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும் நிரந்தர மகிழ்ச்சியை தேடுவது சிறந்தது
- மனிதன் என்பவன் இயற்கையாகவே ஓர் அரசியல் விலங்கு
- இயற்கையில் ஒரு மனிதன் அரசு இல்லாமல் வாழ முடியாது

*புனித அகஸ்டின் [ நூல் - கடவுளின் நகரம் ]*

- அரசியல் என்பது மதத்தின் ஒரு அங்கமாகவே வலிவுறுத்தப்படுகிறது

*ஹெரால்ட் லாஸ்வெல் :*

- அரசியல் என்பது யார் ? எப்போது ? எதனை ? எப்படி ? அடைகிறார்கள் ? என்பது பற்றியதாகும்

*காரல் மார்க்ஸ் :*



- அரசியல் என்பது அரசியல் அதிகாரம் மற்றும் வகுப்பு மோதல்கள் பற்றியதாகும்

*டேவிட் ஈஸ்டன்*

- விழுமியங்களை அதிகார பூர்வமாக ஒதுக்கீடு செய்தல் அரசியல்
- 1948 பாரிஸ் நகரில் கூடிய சிந்தனையாளர்கள் இனிமேல் அரசியல் என்பதை அரசியல் அறிவியல் என அழைக்க வேண்டும் என முடிவு செய்தனர்

*இந்திய அரசியலமைப்பின் வரலாறு*

- இரண்டு வகையாக பிரிக்கலாம் : 1] வணிகக்குழுவின் கீழ் 2] பிரிட்டிஷ் இந்தியாவின் கீழ்

## *வணிகக்குழுவின் கீழ்*

*ஒழுங்குமுறை சட்டம் - 1773*

- பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கிழக்கிந்திய கம்பெனியின் மீது கட்டுப்பாடுகள் கொண்டுவருவதற்கான முதல் முயற்சி இது
- இந்த சட்டம் கம்பெனிக்கென எழுதப்பட்ட அரசியலமைப்பு ஒன்றை வழங்கியது
- வங்காளம், பாம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களை ஒரே நிர்வாக அமைப்புக்குள் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. வங்காளம் தலைமையிடமாக மாற்ற முடிவு
- வங்காளத்தின் முதல் தலைமை ஆளுநராக வாரன் ஹேஸ்டிங் பிரபு நியமனம் செய்யப்பட்டார்
- தலைமை ஆளுநருக்கு உதவி புரிய நான்கு உறுப்பினர்களை கொண்ட நிர்வாக குழு [ executive councile ] உருவாக்கப்பட்டது
- கல்கத்தாவை தலைமையிடமாக கொண்டு உச்ச நீதிமன்றம் 1774 [ 1+ 3 நீதிபதிகள் ] உருவாக்கப்பட்டது

***பிட் இந்திய சட்டம் 1784***

- இங்கிலாந்து பிரதமர் இளைய பிட் என்பவரால் கொண்டுவரபட்டது
- ஒழுங்குமுறை சட்டத்தில் உள்ள குறைகளை களைவதற்காக கொண்டுவரப்பட்டது

I. 1] நிர்வாக குழுவிற்கு வணிகப்பொறுப்பு மட்டும் வழங்கப்பட்டது
II. அரசியல் விவகாரங்களை கவனிக்க ஆறு பேர் கொண்ட கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கப்பட்டது
III. இந்திய நிர்வாகம் தொடர்பான அலுவல்களை கவனிக்க இங்கிலாந்தில் தனி துறை தொடங்கப்பட்டது
IV. முதன் முறையாக கம்பெனியின் பகுதிகள் பிரிட்டிஷ் இந்திய பகுதி என அழைக்கப்பட்டது

***பட்டய சட்டம் - 1793 - 1853:***

- சாசன சட்டம் எனவும் அழைக்கப்படும்
- இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை சாசன சட்டம் இயற்றப்படும்
- முதல் சாசன சட்டம் 1793 ல் கொண்டுவரப்பட்டது

***சாசன சட்டம் 1813:***

- இந்தியர்களின் ***கல்விக்கென ஆண்டுக்கு ஒரு லட்சம் செலவு செய்யப்படும்*** என அறிவிக்கப்பட்டது

***சாசன சட்டம் 1833***

- பெந்தாம் என்பவரின் தாராள மற்றும் பயன்பாட்டு கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது

***சிறப்பு :***

- வங்காளத்தின் தலைமை ஆளுநர் இந்தியாவின் தலைமை ஆளுநராக மாற்றம். இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் வில்லியம் பென்டிங் பிரபு.
- அரசாங்க பதவிக்கு போட்டித்தேர்வு முறையை அறிமுகம் செய்ய முயற்சி
- ஆங்கிலேயர் இந்தியாவில் நிலம் மற்றும் குடியேற அனுமதி அளித்தது
- அணைத்து ராணுவ மற்றும் சிவில் நிர்வாகங்களும் தலைமை ஆளுநரின் கீழ் வந்தது

***சாசன சட்டம் 1853***

- ஆளுநரின் நிர்வாக நடவடிக்கையை கண்காணிக்க 1] சட்டமன்ற நடவடிக்கை [ Legislative Function ] மற்றும் ஆட்சி துறை [ Executive Function ] என்ற இரு அமைப்புகள் உருவாக்கப்பட்டது

- போட்டித்தேர்வு அறிமுகம் செய்யப்பட்டது
- மத்திய சட்டமன்றத்தில் சென்னை, பம்பாய், வாங்காளம், ஆக்ரா ஆகிய ராஜஸ்தானி பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டனர்

*இந்திய அரசு சட்டம் 1858 :*

- இயக்குநர் குழு கலைக்கப்பட்டு புதிதாக இந்தியாவுக்கான செயலர் [ Secretary of State for India] என்ற தனி துறை உருவாக்கப்பட்டது. இந்த ஆலோசனை குழுவில் 15 பேர் இருப்பார்கள்
- இந்தியாவின் தலைமை ஆளுநர் இனி அரச பிரதிநிதியாக [ வைசிராய் ] அழைக்கப்படுவர் என கூறப்பட்டது. இந்தியாவின் முதல் வைசிராய் கானிங் பிரபு ஆவர்
- இந்த சட்டம் விக்டோரிய மகாராணி பேரறிக்கை, மற்றும் இந்திய நல்லாட்சி சட்டம் [ **Act for the good goverment of India** ] என அழைக்கப்பட்டது

***பிரிட்டிஷ் இந்தியாவின் கீழ் இயற்றப்பட்ட சட்டம்***

*இந்திய கவுன்சில் சட்டம் 1861*

- இந்த சட்டத்தை தயாரித்தவர் : சார்லஸ் உட்
- தலைமை ஆளுநரின் கவுன்சிலில் அலுவல் சாராத உறுப்பினர்களை [ இந்தியர்களை ] இணைத்துக்கொள்ள வழிவகை செய்தது
- சென்னை, பாம்பாய், முன்பு இழந்த [1773] சட்டமியற்றும் அதிகாரத்தை மீண்டும் பெற்றன
- 1861 INDIAN HIGHT COURTS ACT படி 1862 ல் சென்னை, மும்பை, கல்கத்தாவில் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் 15 க்கும் குறையாமல் நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர்.
- 1861 ல் இந்திய அரசு பனிச் சட்டம் இயற்றப்பட்டு அரசு பணிகளில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது

*இந்திய கவுன்சில் சட்டம் 1892*

- மத்திய மாகாண சட்டமன்றங்களில் கூடுதல் உறுப்பினர்கள் நியமனம் [ குறைந்தது 10 அதிகபட்சமாக 16 உறுப்பினர்கள் நியமனம் ]
- உறுப்பினர்கள் நியமனம் மறைமுக தேர்தல் முறையில் நியமனம் செய்யப்பட்டனர்

- ஆண்டு வரவு செலவு திட்டம் [ BUDJET ] தாக்களின் போது துணை கேள்விகள் கேட்க உரிமை வழங்கப்பட்டது.

***இந்திய கவுன்சில் சட்டம் 1909***

- இந்த சட்டம் மிண்டோ [ வைசிராய் ] மார்லி [ செயலாளர் ] சீர்திருத்தம் எனவும் அழைக்கப்படும்
- முஸ்லீம் மக்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதின் மூலம் இந்த சட்டம் பிரிவினைக்கு வித்திட்டது
- மிண்டோ பிரபு வகுப்புவாதத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்
- சட்டமன்றங்களுக்கான தேர்தல் என்ற சொல் முதல் முறையாக இடம் பெற்றது
- தலைமை ஆளுநரின் அவையில் ஒரு இந்தியரை நியமனம் செய்து கொள்ளலாம் என அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு நியமிக்கப்பட்ட முதல் நபர் சின்ஹா

***ஆகஸ்ட் அறிக்கை 1917 ஆகஸ்ட் 20***

- ஆகஸ்ட் அறிக்கையை வெளியிட்டவர் : மாண்டேகு பிரபு [ அயலுறவு செயலாளர்]

***சிறப்பு :***

- இந்த சட்டம் இந்தியாவின் மேக்கன கர்டா என மிதவாதிகளால் அழைக்கப்பட்டது
- இந்த சட்டம் இந்தியர்களுக்கு படிப்படியாக தன்னாட்சி வழங்கப்படும் எனக் கூறியது

***இந்திய அரசாங்க சட்டம் 1919***

- மாண்டேகு [ அயலுறவு செயலாளர் ] செம்ஸ்போர்டு [ வைசிராய் ] சட்டம் எனவும் அழைக்கப்படும்

***சிறப்புகள் :***

- மத்தியில் சட்டமியற்றும் கவுன்சிலுக்கு பதிலாக மேலவை கிழவை என்ற ஈரடுக்கு முறை அறிமுகம்
- மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்டது
- மத்திய மாநில அரசுப்பணியில் எவை என்று பிரிக்கப்பட்டது
- மாகாணங்களில் ஓராடுக்கு சட்டமன்றம் உருவாக்கப்பட்டது. உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று வருடம் மற்றும் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை அறுபது என நிர்ணயம் செய்யப்பட்டது
- முதன் முதலாக நேரடி தேர்தல் அறிமுகம் செய்யப்பட்டது. 1920 முதல் தேர்தல் நடைபெற்றது

- சீக்கியர்கள், ஆங்கிலோ இந்தியர், கிறித்தவர்கள், ஐரோப்பியர்கள், பிராமிணர் அல்லாதவர்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டது
- வரிசெலுத்தும் மக்களால் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்
- இந்திய அரசாங்க சட்டம் 1919 பற்றி அன்னிபெசன்ட் அம்மையார் கூற்று : ஆங்கிலேயரின் பெருந்தன்மையற்ற செயல் இதனை ஏற்றுக்கொள்வது இந்தியர்களுக்கு மதிப்புடையது ஆகாது எனக் கூறினார்

***அரசியலமைப்பு பற்றிய காந்தியின் கருத்து :***

- 1922 ல் இந்தியர்களே தங்களுக்கான அரசமைப்பை உருவாக்குவார்கள் என்று கருத்து தெரிவித்தார்
- ***" தன்னாட்சி என்பது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் வழங்கப்படும் கொடையாக இல்லாமல் இந்தியாக்களால் சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் பிரதிநிதிகளிடமிருந்து உருவாக வேண்டும்"***

***கராச்சி காங்கிரஸ் மாநாடு 1931***

- மாநாட்டின் தலைவர் : வல்லபாய் பட்டேல்

  **தீர்மானம்** : அடிப்படை உரிமைகள் பற்றி முதன் முதலாக தீர்மானம் கொண்டுவடபட்டது

  - தன்னாட்சி என்பதன் பொருள் மற்றும் விடுதலை போராட்டத்தின் இலக்கியல் [ IDEALISM ] ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இந்திய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்

- 1934ல் காங்கிரஸ் கட்சி அதிகாரப்பூர்வமாக இந்திய அரசியலமைப்பை இந்தியர்கள் உருவாக்க வேண்டும் எனக் அறிவித்தது
- 1934 ல் அரசியல் நிர்ணய சபை என்ற எண்ணத்தை விதைத்தார் ***M.N. ராய்***
- 1938 ல் ***நேரு*** எந்தவித இடையூறும் இல்லாமல் நாங்களே தனியாக அரசியலமைப்பை உருவாக்குவோம் எனக் கூறினார்

***ஆகஸ்ட் நன்கொடை 1940 ஆகஸ்ட் 8***

- ***நன்கொடை அளித்தவர்*** ; லின்லீத்கோ பிரபு

***சிறப்புகள்***

- அரசியல் நிர்ணயசபை அமைக்க ஒரு குழு அமைக்கப்படும்

- இத்தியரே அவர்களது அரசியல் அமைப்பை அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர்
- புதிய அரசியலமைப்பு பிரிட்டிஷ் காமன் வெல்த்தின் உறுப்பு நாடாக செயல்படும்

***கிரிப்ஸ் தூதுக்குழு 1942***

***சிறப்பு :***

- அரசியலமைப்பை தயாரிக்கும் பனி முற்றிலும் இந்தியர்களிடம் விடப்படும்
- பாதுகாப்பு தவிர பிற துறைகள் இந்தியர்களிடம் விடப்படும்

***அமைச்சரவை தூதுக்குழு 1946***

- இந்த குழு ராபர்ட் ரிச்சர்ட் தலைமையிலான பிரிட்டிஷ் பாராளுமன்ற குழு பரிந்துரையின் பெயரில் அமைக்கப்பட்டது

***அறிக்கை :***

I. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நாள் : மே 16

II. இந்த அறிக்கையின் படித்தான் அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது. அதற்க்கு தேர்தல் நடத்த வேண்டும் எனக் கூறியது

III. விகிதாச்சார அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படவேண்டும்

IV. பகுதி தேர்வு, பகுதி நியமனம்

V. மறைமுக தேர்தல் [ மாநில M L A மூலம் தேர்வு ]

VI. மூன்று மதங்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது [ இந்து, சீக்கியம், முஸ்லீம் ]

VII. 10 லட்சம் மக்களுக்கு ஒரு உறுப்பினர் என தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டது

VIII. அரசியல் நிர்ணய சபையை உருவாக்க 389 உறுப்பினர்கள் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது

IX. 389 உறுப்பினர்களும் 11 மாகாணம், 565 சுதேச அரசுகள் மற்றும் நான்கு தலைமை ஆளுநர் ஆட்சியில் [ ராணுவ ஆட்சி ] உள்ள இடம் [ 1] டெல்லி 2] அஜ்மீர் 3] கூர்க் 4] பலுசிஸ்தான் ] ஆகியவற்றில் இருந்து தேர்வு செய்யப்பட்டனர்

X. 389 உறுப்பினர்களில் 93 உறுப்பினர்கள் சுதேச அரசுகள் மூலம் தேர்வு செய்யப்பட்டனர்

XI. 389 உறுப்பினர்களில் 292 பேர் நேரடி தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கான தேர்தல் 1946 ஜூலை மாதம் நடைபெற்றது. இந்த தேர்தலில் காங்கிரஸ் 208, முஸ்லீம் லீக் 73 மற்றவர்கள் 15 உறுப்பினர்கள் என போட்டியிட்டு வெற்றி பெற்றனர்

XII. 389 உறுப்பினர்களில் 15 பேர் பெண்கள்

XIII. காந்தி ஜின்னா தேர்தலில் பங்குபெறவில்லை. அம்பேத்கார் மகாராஷ்டிராவில் இருந்து தேர்வு செய்யப்பட்டார்.

## அரசியல் நிர்ணய சபை



### முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9:

- **நடைபெற்ற இடம்** : டெல்லி
- **தற்காலிக தலைவர்** : சச்சிதானந்த சின்ஹா
- சச்சிதானந்த சின்ஹாவை தற்காலிக தலைவராக செயல்படுமாறு J.P. கிருபாளினி கூறினார்
- J.P. கிருபாளினி ஐக்கிய மாகாணத்திலிருந்து [ தற்போதைய உத்திரபிரதேசம் ] தேர்வு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது
- முத்த உறுப்பினரை தற்காலிக தலைவராக தேர்வு செய்யும் முறை பிரஞ்சு நாட்டிலிருந்து எடுக்கப்பட்டது
- முதல் கூட்டத்தை முஸ்லீம் லீக் தனிநாடு கோரிக்கையால் புறக்கணித்தது
- முதல் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் மொத்தம் 211 பேர் மட்டுமே

### இரண்டாவது கூட்டம் 1946 டிசம்பர் 11

- இந்த கூட்டத்தில் அரசியல் நிர்ணயசபையின் நிரந்தர தலைவராக Dr. ராஜேந்திர பிரசாத் தேர்வு செய்யப்பட்டார்
- துணை தலைவராக 1] H.C . முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி தேர்வு செய்யப்பட்டனர்
- அரசியல் நிர்ணயசபையின் ஆலோசகராக B.N. ராவ் நியமனம் செய்யப்பட்டார் [ Advisor to the Assembly ]

### சிறப்பு : குறிக்கோள் தீர்மானம்

- இந்த கூட்டத்தில் நேரு அவர்களால் குறிக்கோள் தீர்மானம் [ Objective Resolustion ] கொண்டுவரப்பட்டது
- இதன் நோக்கம் : Fundamentals and Philosophy of the Constitutional Staruture. இந்திய அரசியலமைப்பின் உணர்வு மற்றும் உள்ளடக்கத்தின் மிக சுருக்கமான அறிமுகம்
- 1947 ஜனவரி 22 ல் குறிக்கோள் தீர்மானம் அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது
- குறிக்கோள் தீர்மானம் தற்போது முகப்புரையாக உள்ளது

### *இந்திய பிரிவினைக்கு பின் அரசியல் நிர்ணயசபை:*

- இந்திய பிரிவினைக்கு பின் அரசியல் நிர்ணயசபையின் மொத்த உறுப்பினர்கள் 299 என ஆனது
- 299 உறுப்பினர்களில் 229 பேர் இந்திய மாகாணங்களில் இருந்தும் 70 பேர் சுதேச அரசுகளில் இருந்தும் தேர்வு செய்யப்பட்டவர்கள்
- இந்தியா சுதந்திரம் பெற்றபின் அரசியல் நிர்ணய சபை இறையாண்மை கொண்ட அமைப்பாக மாறியது
- 1947 நவம்பர் 17 முதல் நிர்ணய சபை சட்டமன்றமாக மாறியது

### *நிர்ணய சபையின் பணி:*

- இருவிதமான பணிகளை செய்தது. ஒன்று அரசியலமைப்பு சார்ந்த பணி இதற்கான கூட்டங்களில் அவை தலைவராக ராஜேந்திர பிரசாத் செயல்படுவார்.
- இரண்டாவது பணி சாதாரண சட்டம் இயற்றும் பணி இதற்கான கூட்டங்களில் G.V. மவ்லாங்கர் அவை தலைவராக செயல்படுவார்
- அரசியல் நிர்ணய சபையின் சின்னம் யானை
- அரசியல் நிர்ணய சபை அரசியலமைப்பை இயற்றுவதற்கு 13 குழுக்கள் நியமனம் செய்யப்பட்டது

### *முக்கிய குழுக்கள்*

I. மத்திய அதிகாரங்கள் குழு [ UNION POWER OF COMMITE ] - நேரு
II. மத்திய அரசியலமைப்பு குழு - நேரு
III. மாநிலங்கள் குழு - நேரு
IV. மாகாண அரசியலமைப்பு குழு - வல்லபாய் பட்டேல்
V. அடிப்படை உரிமைகள் குழு - வல்லபாய் பட்டேல்
VI. அடிப்படை உரிமைகளின் துணைக்குழு - கிருபாளிணி
VII. சிறும்பான்மையினர் துணைக் குழு - டி. முகர்ஜி
VIII. வழிகாட்டு குழு தலைவர் [ STEERING COMMITEE ] - ராஜேந்திர பிரசாத்
IX. விதி மற்றும் நடைமுறைக்குழு - ராஜேந்திர பிரசாத்

***சிறியக் குழுக்கள்:***

- தேசிய கொடிக்கான இடைக்கால குழு - Dr. ராஜேந்திர பிரசாத்
- அவை குழு - பட்டாபி சித்தராமையா
- அலுவல் குழு - K.M. முன்ஷி
- வருவாய் மற்றும் ஊழியர்களின் குழு - அனுராக் நாராயணன் சின்ஹா
- மேலவை குழு தலைவர் - மவ்லாங்கர்
- அரசியல் நிர்ணயசபையின் செயலாளர் - H.V.R. ஐயங்கார்
- அரசியல் நிர்ணயசபையின் தலைமை வடிவமைப்பாளர் - S.N. முகர்ஜி

***வரைவுக் குழு 1947 ஆகஸ்ட் 29***

- அணைத்து குழுக்களிலும் முக்கியமான குழு வரைவு குழு
- இதன் தலைவர் Dr B.R. அம்பேத்கார் [ பம்பாயில் இருந்து தேர்வு செய்யப்பட்டார் ]
- வரவு குழுவின் உறுப்பினர்கள் ஆறு [ 1 + 6 ] பேர்.



I. கோபாலசாமி ஐயங்கார் [ விதி 370 ஐ உருவாக்கியவர் ]
II. கிருஷ்ணசாமி ஐய்யர்
III. K.M. முன்ஷி
IV. சையது முகமது சாதுல்லா
V. N. மாதவ்ராவ் [ இவருக்கு முன் B.L. மில்டர் உடல்நிலை சரியில்லாததால் விளகினார்]
VI. T.T. கிருஷ்ணமாச்சாரி [ முன் கேத்தான் இறந்ததால் ]

- வரைவு குழு தனது அறிக்கையை 1948 பிப்ரவரி 22 ல் தாக்கல் செய்தது. வரைவுக் குழு எடுத்துக்கொண்ட காலம் 114 நாட்கள்
- 1948 அக்டோபர் மாதம் முதல் அரசியல் நிர்ணயசபையால் வரைவு குழுவின் அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

- வரைவு குழு மொத்தம் 7653 பரிந்துரை செய்யப்பட்டதில் 2000 திருத்தங்கள் செய்யப்பட்டு இறுதியில் 2473 பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது . பரிந்துரைகள் மீதான விவாதம் மட்டும் 166 நாட்கள் நடைபெற்றது.
- இறுதியில் நமது அரசியலமைப்பு அரசியல் நிர்ணயசபையால் 284 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு 1949 நவம்பர் 26 [ சட்டத்தினம் ] அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது 1950 ஜனவரி 26. 284 உறுப்பினர்களில் தமிழ் கையெழுத்திட்டவர் வீரபாகு ]
- நமது அரசியலமைப்பு 60 நாடுகளின் அரசியலமைப்பில் இருந்து எடுக்கப்பட்டது.
- அரசியல் நிர்ணய சபை அரசியலமைப்பை இயற்ற 64 லட்சம் செலவு ஆனது
- அரசியல் நிர்ணயசபை அரசியலமைப்பை இயற்ற எடுத்துகொண்ட காலம் 1946 டிசம்பர் 9 முதல் 1949 நவம்பர் 26 வரை [ 2 வருடம் 11 மாதம் 18 நாட்கள் ] ஆகும்
- 1946 டிசம்பர் 9 முதல் 1950 ஜனவரி 24 வரை அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் 12 தொகுப்பாக நடைபெற்றது
- முதல் தொகுப்பு 1946 டிசம்பர் 9 - 23 வரை நடைபெற்றது
- சுதந்திரத்திற்கு பின் நடந்த முதல் தொகுப்பு [ ஐந்தாவது தொகுப்பு ] 1947 ஆகஸ்ட் 14 முதல் 20 வரை
- கடைசி தொகுப்பு : 1950 ஜனவரி 24 [ இறுதி கூட்டம் ]
- நமது அரசியலமைப்பு தொடங்கும்போது 395 விதிகள், 8 அட்டவணை, 22 பகுதிகள் இருந்தது.
- தற்போது 465 விதிகள் 12 அட்டவணை 25 பகுதிகள் உள்ளன

***சிறப்புகள்:***


- நமது அரசியலமைப்பு புத்தகத்தை ஆங்கிலத்தில் எழுதியது - பீம் பிகாரி நாராயணன்
- அரசியலமைப்பு புத்தகத்தை ஹிந்தியில் எழுதியவர் - வசந்த் கிருஷ்ணன் வைத்தியர்
- அரசியலமைப்பு ஆங்கில புத்தகத்தை அலங்கரித்தவர் - ராம் மனோகர் சின்ஹா
- அரசியலமைப்பு ஹிந்தி புத்தகத்தை அலங்கரித்தவர் - நந்தலால் போஸ்
- இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரேம் பீகாரி நரேன் ரைஜடா என்பவரால் இத்தாலி பாணியில் கைப்பட எழுதப்பட்டது

***நமது அரசியலமைப்பு பற்றிய கருத்துக்கள்***

- நசுருதின் அகமது - வரைவு கமிட்டி அதிக காலம் எடுத்துக்கொண்ட்து எனக் கூறினார்
- ஆஸ்டின் - முழுவதும் காங்கிரஸ்காரர்களால் எழுதப்பட்டது
- விஸ்கட் சிம்மன் - BODY OF HINDU
- சர்ச்சில் - DOMINATE BY HINDUS
- பால் ஆப்பிளை - இந்திய அரசியலமைப்பு அதீத கூட்டாட்சி தன்மையுடையது எனக் கூறினார்
- கிரான்வில் ஆஸ்டின் - இந்திய அரசியலமைப்பு முதல் மற்றும் முதன்மையான ஒரு சமூக ஆவணம்

***முகப்புரை [ PREAMBLE ]***

- அரசியலமைப்பின் அறிமுகம், முன்னுரை, திறவுகோல் என்று அழைக்கப்படுகிறது
- சட்டத்தின் அறிமுகம் முகப்புரை
- மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் எனக் கூறுகிறது முகப்புரை
- அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் நோக்கம் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது முகப்புரை
- ஜவகர்லால் நேருவால் கொண்டுவரப்பட்ட குறிக்கோள் தீர்மானம் தான் தற்போதைய முகப்புரை
- முகப்புரை அமெரிக்காவில் இருந்து எடுக்கப்பட்டது
- முகப்புரை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது 1949 நவம்பர் 26
- இந்திய மக்களாகிய நாம் என்ற சொற்றோடருடன் முகப்புரை தொடங்கும்




***முகப்புரையின் குறிக்கோள் : SSSDR***

- SOVERIGN - இறையாண்மை
- SOCIALIST - சமதர்மம்
- SECULAR - மதச்சார்பற்ற
- DEMOCRATIC - மக்களாட்சி
- REPUBLIC - குடியரசு

***லட்சியம் ASPIRATIONS***

- JUSTICE - நீதி
- LIBERTY - சுதந்திரம்
- EQUALITY - சமத்துவம்
- FRATERNITY - சகோதரத்துவம்
- INTEGRITY - ஒருமைப்பாடு

- முகப்புரை 1976 ல் 42 வது சட்டதிருத்தத்தின் மூலம் SOCIALIST, SECULAR , INTEGRITY ஆகிய வார்த்தைகள் சேர்க்கப்பட்டது. முகப்புரை ஒருமுறை மட்டுமே திருத்தும் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது
- 1789 ல் நடைபெற்ற பிரஞ்சு புரட்சியில் இருந்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய வார்த்தைகள் எடுக்கப்பட்டன
- 1917 ரஷ்ய புரட்சியில் இருந்து சமுதாய நீதி [ JUSTICE ], பொருளாதார நீதி [ ECONOMIS JUSTICE ], அரசியல் நீதி [ POLITICALJUSTICE ] ஆகியவை எடுக்கப்பட்டது

***இறையாண்மை :***

- உள்நாட்டு , வெளிநாட்டு விவகாரங்களிலும் முடிவெடுக்கக்கூடிய மேலான உரிமை மக்களிடமே இருக்கிறது.
- எந்த வெளிப்புற அதிகார அமைப்பும் இந்திய அரசாங்கத்திற்கு ஆணையிடும் அதிகாரம் கிடையாது

***சமதர்மம் :***

- மக்களுக்கு தேவைப்படும் வளங்களை மக்களே உருவாக்கவும் அவற்றை சமமாக பகிரவும் சமுதாயத்தில் உள்ள உரிமை
- அரசாங்கம் நிலம் மற்றும் தொழில் சார்ந்த உரிமையை ஒழுங்குபடுத்தி சமூக பொருளாதார சமத்துவமின்மையை குறைகிறது

***மதச்சார்பின்மை :***



- இது அரசியலமைப்பின் அடிப்படை என அழைக்கப்படுகிறது
- எந்த மதத்தையும் பின்பற்றும் உரிமை குடிமக்களுக்கு உண்டு
- அலுவல் மதம் என்று ஒன்று கிடையாது
- அரசு அணைத்து மதங்களையும் காக்கிறது
- எந்த அரசும் தனியாக எந்த மதத்தையும் உயர்த்தக்கூடாது

***வரலாறு :***

- 1789 ல் பிரஞ்சு அரசியலமைப்பு சட்டம் முதன் முதலில் பிரஞ்சு நாட்டை மதசார்பற்ற நாடாக அறிவித்தது
- இந்தியாவில் மகாராஜா ரஞ்சித் சிங் மதசார்பற்ற கொள்கையை முதன் முதலில் கடைபிடித்தார்
- 1888ல் காங்கிரஸ் கட்சி மதசார்பற்ற கொள்கையை கடைப்பிடித்தது
- மதசார்பற்ற கொள்கையை இந்திய மக்களிடம் பரப்பியவர் நேரு

***மக்களாட்சி :***

- அரசாங்கத்தில் மக்கள் சமமான அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும் தங்களின் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கவும், பொறுப்புடன் அவர்களை செயல்பட வைக்கவும் ஏதுவான முறை மக்களாட்சி
- அரசாங்கம் சில அடிப்படை விதிமுறைகளின் அடிப்படையில் செயல்படும்

***குடியரசு :***

- அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருத்தல் வேண்டுமே தவிர வாரிசுரிமை அடிப்படையில் அல்ல

***நீதி :***

- குடிமக்களை சாதி, மதம், இனத்தின் அடிப்படையில் பாகுபடுத்துவது தவறு.
- பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு உழைக்கவும், செயல்படவும் வேண்டும்

***சுதந்திரம் :***

- குடிமக்கள் சுதந்திரமாக சிந்திக்கவும் எண்ணங்களை வெளிப்படுத்தவும் எண்ணியப்படி நடவடிக்கைகளில் ஈடுபடவும் நியாயமற்ற கட்டுப்பாடுகள் கிடையாது.

***சமத்துவம் :***

- சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- அரசாங்கமானது அனைவர்க்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்

***சகோதரத்துவம்***

- சககுடிமகன் யாரையும் தாழ்வாக பாவிக்கக் கூடாது
- நாம் அனைவரும் ஒரே குடும்பம்போல் சக மனிதர்களை பாவித்து நடந்துகொள்ள வேண்டும்

***முகப்புரை சம்மந்தமான வழக்குகள்:***

**ரீ பெருபாரி வழக்கு 1960:**

- ***தீர்ப்பு:*** முகப்புரை இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி அல்ல

***லோக்நாத் VS பஞ்சாப் வழக்கு 1967***

- ***தீர்ப்பு***: முகப்புரை அரசியலமைப்பின் ஒரு ஆன்மா அது அழிவில்லாதது ம்,மாற்ற இயலாதது

***கேசவானந்த பாரதி VS கேரளா வழக்கு 1973:***

- ***தீர்ப்பு:*** முகப்புரை இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி, திருத்தலாம் ஆனால் அடிப்படை கட்டமைப்பை மாற்றக்கூடாது

***S.R. பொம்மை வழக்கு 1994***

- ***தீர்ப்பு:*** முகப்புரை அரசியலமைப்பின் ஒரு பகுதி
- முகப்புரை நீதிமன்றத்தால் நிலைநிறுத்தப்பட முடியாது

***முகப்புரை பற்றிய கருத்துக்கள்:***

- ***K.M. முன்ஷி:*** முகப்புரையை அரசியல் ஜாதகம் எனக் கூறினார்
- ***எர்னஸ்ட் பர்க்கர்***- அரசியலமைப்பின் திறவுகோல்
- ***தாக்கூர் தாஸ் பார்கவா*** - அரசியலமைப்பின் ஆன்மா
- ***N.A. பால்கிவாலா*** - அரசியலமைப்பின் அடையாள அட்டை
- ***அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்***- எங்கள் நீண்ட நாள் சிந்தனையும் , கலையையும் உள்ளடக்கியது

## இந்திய அரசியலமைப்பு

### *பகுதி I : [ விதி - 1 முதல் 4 ]*

- மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தின் எல்லைகள்

***விதி 1:***

- இந்தியாவை பாரதம் என்று கூறுகிறது
- இந்தியாவை மாநிலங்களின் கூட்டிணைவு [ UNION OF STATE } என்றும் கூறுகிறது
- அரசியலமைப்பில் எந்த ஒரு இடத்திலும் கூட்டாட்சி [ FEDERATION ] என்ற சொல் பயன்படுத்தவில்லை

***விதி 2 :***

- புதிய மாநிலங்களை நிறுவுதல், புதிய மாநிலங்களை இந்திய எல்லைக்குள் சேர்த்தல்
- Admission or establishement of new state that are not part of the union of India

***எடுத்துக்காட்டு:***

- 100 வது சட்டத்திருத்தம் 2014 ல் வங்கதேசத்தின் சிலப் பகுதிகளை கொடுத்து சிலப்பகுதிகளை இந்தியா பெற்றது
- 1971 ல் நடந்த இந்திய - வங்கதேசத்திற்கு இடையிலான நில எல்லைகோடு ஒப்பந்தம் இந்த விதியின் கீழ் நடந்தது

***விதி 3 :***

- புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் பெயர்கள் எல்லைகளை மாற்றம் செய்தல்
- Internal re adjustment alter the state name boundaries area

***Two conditions:***

- பாராளுமன்றத்தில் குடியரசு தலைவரின் பரிந்துரையின் பெயரில் தான் நிறைவேற்ற வேண்டும். [ Recommendation of the President ]
- குடியரசு தலைவர் மாநிலத்தை பிரிப்பதற்குமுன் அந்த மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு மசோதாவை அனுப்பி கருத்து கேட்க வேண்டும்
- யூனியன் பிரதேசமாக இருந்தால் பாராளுமன்றமே சட்டம் இயற்றலாம் கருத்து கேட்க வேண்டாம்

*விதி 4 :*

- விதி 2 மற்றும் 3 கீழ் கொண்டுவரப்படும் திருத்தத்திற்கு பாராளுமன்றத்தில் அனுமதி பெறவேண்டும் எனக் கூறும் விதி இது
- திருத்தும் விதி 368 [ சட்டத்திருத்தம் ] கீழ் வராது
- சாதாரண பெரும்பான்மையுடன் திருத்தினால் போதும்

***விதிவிலக்கு :***

- இந்திய பகுதிகளை ஏதேனும் வெளிநாட்டுக்கு கொடுத்தால் அது சட்டதிருத்தத்தின் [ விதி 368 ] மூலம் மேற்கொள்ள வேண்டும்.

***எடுத்துக்காட்டு :***

- இந்தியா - பாகிஸ்தான் உடன்படிக்கை 1958 ன் படி மேற்குவங்காளத்தில் உள்ள பெருபரி என்ற இடத்தை வங்காளத்துடன் இணைக்க அப்போதைய காங்கிரஸ் அரசு முயற்சி செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடரப்பட்டது. [பெருபாரி வழக்கு 1960 ]
- 9 வது சட்டதிருத்தத்தின் படி 1960 ல் பாகிஸ்தானுக்கு பெருபாரி இடம் விட்டு கொடுக்கப்பட்டது
- 1969 ல் உச்ச நீதிமன்றம் இனி சட்டதிருத்தத்தின் மூலம் விதி 4 கீழ் மாற்றம் கொண்டுவர வேண்டாம் எனக் கூறியது.

## ***சுதேச அரசுகள் ஒன்றிணைப்பு***

*வரலாறு :*

- பெரிய அளவிலான நிர்வாக மாகாணத்தில் ஒரு சிறிய அரசியல் அமைப்பே சுதேச அரசு
- கி.பி. 200 ல் மத்திய ஆசிய பகுதியிலிருந்து இந்திய துணைக்கண்டத்திற்கு புலம் பெயர்ந்த ராஜபுத்திரர்களால் சுதேச அரசுகள் தொடங்கப்பட்டது. ராஜபுத்திரர்கள் என்றால் அரசர்களின் இளவரசர்கள் என்று பொருள்
- பிரிட்டிஷ் இந்தியாவில் இவை சுதேச அரசுகள் என அழைக்கப்பட்டன

***பிரிட்டிஷ் ஆட்சியில் சுதேச அரசுகள்***

- பிரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் 565 சுதேச அரசுகள் இருந்தன
- சுதேச அரசர்களின் மரியாதை குண்டு முழக்கத்தின் அடிப்படையில் இருந்தது

***குண்டு முழங்கும் அதிகாரம் பெற்ற அரசுகள்***

- 117 முதல் 120 வரை இருக்கலாம். இவர்களில் 21 குண்டு முழங்கும் அதிகாரம் பெற்றவர்கள் மற்றும் 9 குண்டு முழங்கும் அதிகாரம் பெற்ற சுதேச அரசுகள் என பிரிக்கலாம்

***21 குண்டு முழங்கும் அதிகாரம் பெற்றவர்கள்:***

- குவாலியர் மன்னர் சிந்தியா
- ஜம்மு காஷ்மீர் மகாராஜா
- ஐதராபாத் மற்றும் பிரார் நிஜம்
- பரோடா மகாராஜா கேக்வார்
- மைசூர் மகாராஜா

***9 குண்டு முழங்கும் அதிகாரம் பெற்றவர்கள்***

- சச்சின் நவாப், பாட்னா மகாராஜா, வாத்வான் மகாராஜா, லலாகரு நவாப்

***அட்லீ அறிவிப்பு 1946 மார்ச் 15***

- அட்லீ இங்கிலாந்து பிரதமர்
- ***" இந்தியா பல இனங்கள் மதங்கள் மற்றும் மொழிகளை கொண்ட நாடு என்பதையும் அதனால் உருவாகும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து நன்கு அறிவேன். ஆனால் இத்தகைய தடைகளை இந்தியர்களே எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும். சிறும்பான்மையோர் உரிமைகள் எப்போதும் நமது சிந்தனையில் இருக்க வேண்டும். அவர்கள் அச்சம் இல்லாமல் வாழும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்".***

***அனைத்திந்திய மாநில மக்கள் மாநாடு :***

- 1945 டிசம்பர் மற்றும் 1947 ஏப்ரல் மாதம் நடத்தப்பட்டது
- இந்திய அரசமைப்பு நிர்ணய சபையோடு இணைய மறுக்கும் மாநிலம் இந்திய ஒன்றியத்தின் எதிரியாக கருதப்படும் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது
- 565 சுதேச அரசுகளை இணைக்கும் பொறுப்பு உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் பட்டேலிடம் கொடுக்கப்பட்டது
- பட்டேலின் செயலாளராக V.P. மேனன் நியமிக்கப்பட்டார். [ V.P. மேனன் மூன்று பிரிட்டிஷ் வைசிராய்களுடன் பணியாற்றியவர் ]

***இணைப்புறுதி ஆவணம் [ INSTRUMENT OF ACCESSION ]***


- 1935 ஆண்டு சட்டத்தின் படி உருவாக்கப்பட்டது
- இணைப்புறுதி ஆவணத்தில் இணையும் சுதேச மன்னர்களுக்கு தாராளமாக மன்னர் மானியங்கள் வழங்கப்பட்டன. [ PRIVY PURSE TO THE PRINCES ]. பின்னர் 26 வது சட்டத்திருத்தம் 1971 ல் மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது .
- இணைப்புறுதி ஆவணத்தில் 562 சுதேச அரசுகள் இணைந்தன
- ஜூனாகத், காஷ்மீர், ஐதராபாத் சுதேச அரசுகள் இணைய மறுத்துவிட்டது.

***ஜூனாகத் மற்றும் மன்வாதர் :***

- பம்பாய்க்கு வடமேற்க்கு பகுதியில் உள்ளது. நிலப்பரப்பில் மூன்று பகுதி இந்தியாவுடனும் நான்காவது பகுதி அரபிக்கடலை எல்லையாக கொண்டது
- திவானாக இருந்த ஷா நவாஸ் இந்தியாவுடன் இணைய விரும்பவில்லை
- மக்கள் பெரும்பான்மையினர் முஸ்லீம் அல்லாதவர்கள்
- 1947 ஆகஸ்ட் 15 ல் திவான் ஜூனாகத்தை பாகிஸ்தானோடு இணைத்துக்கொண்டார். மக்கள் இந்தியாவுடன் இணைய வேண்டும் எனக் போராட்டம் மேற்கொண்டனர்.
- போராட்டம் வன்முறையாக மாற திவான் குடும்பத்தோடு கஜானாவை காலிசெய்து கராய்ச்சி தப்பி சென்றார்
- 1948 பிப்ரவரி 20 ல் முறையாக மக்கள் வாக்கெடுப்பு [ PLEBICITE ] நடத்தி இந்தியாவுடன் இணைக்கப்பட்டது

***ஐதராபாத் இணைப்பு :***

- ஐதராபாத் நிஜம் பத்தேஜங் ஒரு முஸ்லீம். மக்கள் முஸ்லீம் அல்லாதவர்கள்
- நிஜம் வைசிராய் மௌண்ட்பேட்டனுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் படி ஒரு வருடம் தன்னாட்சி அதிகாரம் அதற்குள் தீர்வு காண வேண்டும் என முடிவு செய்யப்பட்டது
- நிஜாம் காசிப் ரஸ்வி என்ற மதவாத தலைவரின் செல்வாக்கிற்கு அடிமைப்பட்டு கிடந்தார்
- காசிப் ரஸ்வி இந்தேக்த் - உல் - முசுல் மான் என்ற ஆயுதம் தாங்கிய அமைப்பின் தலைவர். இவ்வமைப்பை சார்ந்தவர்கள் ராசாக்கர் என அழைப்பு
- காசிப் ரஸ்வி 1948 மார்ச் 31 ல் ARMS WEEK [ போராயுத வாரம் ] ஹைதராபாத்தை தாக்கினால் இந்துக்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டல் விடுத்தார்
- காசிப் ரஸ்விக்கு ஆதரவாக நிஜாம் , கராய்ச்சி, ஈரான், ஈராக், பிரிட்டிஷ் ரகசியப்படை ஆதரவும் இருந்தது. சர் வால்டேர் மான்க்டன் என்ற ஆங்கிலேய ஆலோசகரும் உதவி புரிந்தார்




***ஆப்ரேசன் போலோ : 1948 செப்டம்பர்***

- பட்டேல் இந்தியாவிற்குள் ஐதராபாத் தனித்தீவாக இருப்பது இந்திய உடலில் குத்திய முள்ளாக இருக்கும் என எண்ணினார்
- செப்டம்பர் 13 ல் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்திய ராணுவம் ஐதராபாத்திற்குள் சென்றது.
- நிஜாமின் படைகள் நான்கு நாட்களில் இந்திய ராணுவத்திடம் சரணடைந்தது.

***காஷ்மீர் இணைப்பு***

- காஷ்மீர் மன்னர் ஹரிசிங் 1947 ஆகஸ்ட் 15 ல் பாகிஸ்தானோடு ஒப்பந்தம் செய்தார்.
- இந்த நிரந்தர ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானில் மக்கள் குடியேறவும், பொருட்களை கொண்டு செல்லவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் பாகிஸ்தான் அத்துமீறி குடியேற்றம் செய்ததால் மன்னர் இந்தியாவின் உதவியை நாடினார்
- மன்னர் ஹரிசிங் மற்றும் பிரதமர் நேருக்கும் இடையில் 1954 அக்டோபர் 26 ல் உடன்படிக்கை ஏற்பட்டது
- காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது
- காஷ்மீர் கிழக்கு உலகின் வெனிஸ் என அழைப்படுகிறது

***ஜோத்பூர் இணைப்பு :***

- இந்துக்கள் பெரும்பான்மையாக கொண்ட பகுதி
- முதலில் இந்தியாவுடன் இணைவதாக இருந்தது. புதிய மன்னர் ஹன் வசந்த் சிங் பாகிஸ்தானுடன் இணைய முடிவு செய்தார்
- ஜின்னா இவருக்கு அளித்த சலுகை : கராய்ச்சி துறைமுகத்தை பயன்படுத்த அனுமதி மற்றும் ஆயுதம் உற்பத்தி, இறக்குமதி செய்ய அனுமதி
- பட்டேல் அளித்த சலுகை : ஜோத்புர் கத்தியவார் இடையே ரயில்போக்குவரத்து அமைக்கப்படும். பஞ்சகாலத்தில் இலவச உணவு தானியம் அளிக்கப்படும் எனக் கூறி இந்தியாவுடன் இணைத்தார்

## ***மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு***

- 1917 ல் காங்கிரஸ் கட்சியால் மொழி அடிப்படையில் மறுசீரமைப்பு கோரிக்கை தொடக்கம்
- 1920 களில் மாநிலங்கள் மொழி அடிப்படையில் அமைய திட்டமிடப்பட்டது
- நிர்வாகத்திற்கும் அடிப்படைக் கல்விக்கும் உள்ளூர் மொழிகளின் தேவை உணரப்பட்டது

***நாக்பூர் காங்கிரஸ் மாநாடு 1920 :***

- ***மொழிவாரியான மாகாண காங்கிரஸ் குழுக்கள் அமைக்கப்படுவதன் மூலம் மொழி அடையாளத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அடையாளம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்து தீர்மானம் கொண்டுவரப்பட்டது.***
- மொழிவாரி மாநிலத்திற்கு ஆதரவு அளித்தவர்கள் திலகர் அன்னிபெசன்ட் அம்மையார் காந்தி

***நேரு அறிக்கை 1928 பிரிவு 86:***

- ***நிதி மற்றும் நிர்வாக காரணங்களுக்கு உட்பட்டு பெரும்பான்மை மக்கள் வாழும் இட அடிப்படையில் மாநிலங்களை மொழிவாரியாக மறுசீரமைக்கும் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறுகிறது***

***முதல் மொழிவாரி மாநிலம் ஒடிசா***

- 1895 ல் பீகாரிலிருந்து ஒடிசா தனியாக பிரிக்கவேண்டும் என போராட்டம் நடத்தப்பட்டது
- 1927 ல் மொழிகளின் அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைக்கும் பனி தொடக்கம்
- 1936 ல் விடுதலைக்கு முன்பு முதல் மொழிவாரியாக மாநிலமாக ஒடிசா உருவானது

***காங்கிரஸ் தேர்தல் அறிக்கை 1945:***

- **காங்கிரஸ் ஒவ்வொரு குழுவின் சுதந்திரத்திற்கும் துணை நிற்பதோடு அந்த குழுக்களின் தனிப்பட்ட வாழ்வு, கலாச்சாரம் போன்றவற்றை மேம்படுத்த தேசத்திற்குள் மொழி மற்றும் கலாச்சார அடிப்படையில் மாகாணங்களை அமைக்கவும் துணை செய்யும்**

***பட்டாபி சித்தராமையா அறிக்கை 1946 ஆகஸ்ட் 31:***

- ஆந்திரா மாகாணத்திற்கான கோரிக்கையை அரசியல் நிர்ணய சபை முன் முன்வைத்தார்
- இந்த முழுப்பிரச்சனையை முதல் பிரச்சனையாகவும் முக்கிய பிரச்சனையாகவும் எடுத்து அரசமைப்பு நிர்ணய சபை தீர்வுகாண வேண்டும் எனக் கூறினார்
- 1946 டிசம்பர் 8 ல் இவர் மொழிவாரி மாநில மறுசீரமைப்பு கொள்கையை அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.
- இவரது கோரிக்கையை வரைவு குழு நிராகரித்தது
- இந்திய அரசாங்க சட்டம் 1935 ல் சிந்து, ஒரிசா போல் ஆந்திராவும் தனி அலகாக குறிப்பிடப்படும் என கூறியுள்ளது

## மொழிவாரி மாகாண ஆணையம் 1948:

### தார் கமிஷன் 1948 :

- மொழியின் அடிப்படையில் மாநிலத்தை பிரிப்பதற்காக போடப்பட்ட முதல் கமிஷன்
- 1948 ஜூன் 17 அரசியல் நிர்ணய சபையின் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் நியமிக்கப்பட்டது இந்த கமிஷன்

### உறுப்பினர்கள்:

- S.K. தார் [ அலகாபாத் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ]
- பன்னாலாலும் [ ICS அதிகாரி ]
- ஜகத் நாராயணன் [ அரசமைப்பு சட்டமன்ற உறுப்பினர் ]

### அறிக்கை 1948 டிசம்பர் 10

- மொழிவாரி மாநிலம் பிரிதல் தேச ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்
- நிர்வாக சிக்கல் ஏற்படும் என்பதாலும் மொழிவாரி மாநிலம் என்பதை ஆதரிக்கவில்லை
- மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் உறுதியாக இணைக்கப்படவில்லை
- சில மாகாணங்கள் நிர்வாக காரணங்களுக்காக மாற்றியமைக்கலாம் என்க கூறியது
- புதிய மொழிவாரி மாகாணங்களாக ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகியவற்றை உருவாக்குவது பற்றி ஆராய்ந்தது இந்த கமிஷன் .

### J.V.P. கமிட்டி 1948 டிசம்பர்:

- J - நேரு V - பட்டேல் P - பட்டாபி சித்தராமையா
- 1948 ஜெய்ப்பூர் காங்கிரஸ் கூட்டத்தின் தலைவராக பட்டாபி சித்தராமையா தேர்வு செய்யப்பட்டார்
- மொழிவாரி மாநில கோரிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது
- இந்த குழு மொழிவாரி மாகாண கோரிக்கையை ஆராய போடப்பட்டது

### அறிக்கை 1949 ஏப்ரல் 1 :

- மொழிவாரி மாகாணத்தின் ஆணையத்தின் [ தார் கமிஷன் ] முடிவை ஆதரித்தது JVP கமிட்டி
- குறுகிய பிராந்தியவாதத்தை வலியுறுத்துகின்றன என்றும் அது நாட்டின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாக உருவாகக்கூடும் என தெரிவித்தது.
- மொழியானது பிணைக்கும் ஆற்றலை கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது

- நாட்டில் சாதகமான சூழ்நிலை உருவாகும் போது மக்களின் சிந்தனைகள் அமைதிப்படும் போது எல்லைகளை மாற்றி அமைத்து புதிய மாகாணங்களை உருவாக்கலாம் என்றும், அவ்வாறு உருவாக்குவது எளிதாகவும் அணைத்து அக்கறைகளுக்கும் நன்மை தருவதாக அமையும்
- முடிவுரையில் மொழிவாரி மாநில மறுசீரமைப்பிற்கு இது உகந்த நேரமல்ல
- ஒற்றுமை மற்றும் வளர்ச்சியை காரணம் காட்டி எதிர்த்து

***முதல் மொழிவாரி மாநிலம் ஆந்திரா 1953***

***வரலாறு:***

- 1917 ல் தனி ஆந்திரா மாகாண கோரிக்கையை தெலுங்கானா வலியுறுத்தியது
- விடுதலை அடைந்தவுடன் பிரகாசம் போன்ற ஆந்திர தலைவர்கள் பட்டேலிடம் இதுகுறித்து வலியுறுத்தினர்
- 1948 விசாகப்பட்டினம் வந்த நேரு மொழிவழி மாநிலம் அமைக்க தனிக்குழு அமைக்கப்படும் எனக் கூறினார்

***பொட்டி சிரிராமலு:***



- 1952 அக்டோபர் 19 ல் தனி ஆந்திரா மாநிலம் கோரி சாகும்வரை உண்ணாவிரதை தொடங்கினார் சிரிராமலு .
- உண்ணாவிரதம் தொடங்கிய இடம் சென்னை மஹரிஷி புலுசு சாம்பமூர்த்தி இல்லம்
- 1952 டிசம்பர் 15 சிரிராமலு 56 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து காலமானார்
- 1952 டிசம்பர் 19 நேரு தனி ஆந்திரா மாநிலம் அமைவதை அறிவித்தார்
- 1953 அக்டோபர் முறைப்படி கர்நூலை தலைநகராக கொண்டு முதல் மொழிவாரி மாநிலமாக ஆந்திரா உருவானது.
- 1956 ல் ஐதராபாத் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டு தலைநகராக மாறியது
- ஆந்திரா தனிமாநிலம் உருவாக்கத்திற்கு பின் இந்தியாவில் மொழிவாரி மாநில கோரிக்கை வலுப்பெற்றது

***மாநில மறுசீரமைப்பு ஆணையம் 1953 டிசம்பர்:***

- **தலைவர்** : பாசல் அலி
- **உறுபினர்கள்** : H.N. குன்ஸ்ரு, K.M. பணிக்கர்
- **பரிந்துரை** : 1955 செப்டம்பர்
- **அறிக்கை** : 1955 அக்டோபர் 22
- பரிந்துரையில் மொழிகளின் அடிப்படையில் மாநிலத்தை பிரிப்பதற்கு நான்கு அம்சங்களை கூறியது

***1] மொழி மற்றும் பண்பாட்டு ஒத்த தன்மை:***

- ஒரே மொழி பேசும் மக்களை கொண்ட மாநிலமாக இருப்பின் தனி மாநில கோரிக்கையை நிராகரிக்கலாம்
- பல வட இந்திய மாநிலங்களில் இந்தி மொழி பேசப்படுகிறது. இவற்றிற்கு தனி மாநில அந்தஸ்து கூடாது.

***II ] நிதி பொருளாதார மற்றும் நிர்வாக கருதுகோள்:***

- ❖ அரசியல் பொருளாதார மற்றும் நிர்வாக செயல்பாடுகள் அனைத்து பகுதி மக்களுக்கும் சரிசமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்
- ❖ மொழியை மட்டுமே ஒருங்கிணைப்பு அம்சமாக கொள்ள கூடாது
- ❖ நமது அரசியலமைப்பு சம உரிமைகள் மற்றும் அனைவருக்குமான வாய்ப்புகள் என்ற நிலைப்பாட்டினை வலியுறுத்துகிறது

***III] தேசத்தின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பினை வழிபடுத்திக் பராமரித்தல்:***

- ❖ மொழிவாரி மாநிலம் அமைந்தால் குறிப்பிட்ட பிரிவு மீது மட்டும் அனுதாபம் கொள்ளும் நிலை உருவாகும்
- ❖ நமது தேசிய உணர்வுக்கும் பன்மைத்துவத்துக்கும் எதிரானது என்பதனையும் ஒற்றை மொழி பேசும் மாநிலங்கள் புரிந்து கொண்டால் தான் தேசாப் பற்றினை ஆழமாக வளர்க்க முடியும்

***VI ] மாநில மக்கள் மற்றும் முழுமைக்குமான திட்டமிடல்:***

- ❖ ஒரு மொழி பேசுபவர்களோ அல்லது பல மொழி பேசும் சமுதாயத்தினரோ குறிப்பிட்ட நிர்வாகத்தின் கீழ் வசித்தாலும்
- ❖ பல்வேறு மொழிகள் பேசும் சமுதாயங்களின் மக்கள் தகவல் தொடர்பு கல்வி மற்றும் கலாச்சார தேவைகளை மேம்படுத்தும் வகையில் மக்கள் நல திட்டங்களை அணைத்து மாநிலங்கள் மற்றும் ஒட்டு மொத்த நாட்டின் மக்களையும் கருத்தில் கொள்வதாக இருக்க வேண்டும்
- ❖ இறுதியாக இந்தியாவை 16 மாநிலம் மற்றும் 3 யூனியன் பிரதேசமாக பிரிக்க பரிந்துரை செய்தது

***மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956 நவம்பர் 1:***




- ❖ பாசல் அலி கமிட்டி பரிந்துரையின் கீழ் மாநில மறுசீரமைப்பு சட்டம் 7 வது சட்டத்திருத்தம் 1956 ல் கொண்டுவரப்பட்டது
- ❖ இந்தியாவை 14 மாநிலம் 6 யூனியன் பிரதேசமாக மாநில மறுசீரமைப்பு சட்டத்தின்படி பிரிக்கப்பட்டது

***14 மாநிலம்:***

- ❖ 1] ஆந்திரா 2] அஸ்ஸாம் 3] பீகார் 4] பம்பாய் 5] காஷ்மீர் 6] கேரளா 7] மத்திய பிரதேசம் 8] சென்னை 9] மைசூர் 10 ] ஒரிசா 11] பஞ்சாப் 12] ராஜஸ்தான் 13] உத்திரபிரதேசம் 14] மேற்கு வங்காளம்

**6 யூனியன் பிரதேசம் :**

- 1] அந்தமான் நிக்கோபர் 2] தில்லி 3] ஹிமாச்சல் 4] லட்சத்தீவு மினிக்காய் தீவு, அபினித்தீவுகள் 5] மணிப்பூர் 6] திரிபுரா

***15 வது மாநிலம் குஜராத் & மகாராஷ்டிரா 1960 :***



- பம்பாய் மறுசீரமைப்பு சட்டம் 1960 ன் படி பம்பாய் மாகாணம் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா என இரண்டாக பிரிக்கப்பட்டது
- பம்பாய் மாகாண முதலமைச்சராக மொராஜி தேசாய் இருந்தார்

***16 வது மாநிலம் நாகலாந்து 1962 :***

- அஸ்ஸாமிலிருந்து 1957 ல் பிரிக்கப்பட்டு நாகலாந்து மத்திய நிர்வாக பகுதியாக [ EVENTUALLY ADMINISTRATED ] ஆக்கப்பட்டது
- குடியரசு தலைவர் அஸ்ஸாமில் ஆளுநர் ஆட்சி கொண்டுவந்தார்
- பின்னர் நாகலாந்து மாநில மறுசீரமைப்பு சட்டம் 1962 ல் கொண்டுவந்து 1963 டிசம்பர் 1 ல் தனி மாநில அந்தஸ்து பெற்றது

***17 வது மாநிலம் ஹரியானா 1966:***

- பஞ்சாப் மாநில மறுசீரமைப்பு சட்டம் 1966 ன் படி ஹரியானா தனி மாநிலம் ஆனது. பஞ்சாப் ஹரியானா இரண்டிற்கும் பொதுவான தலைநகர் சண்டிகர்

***18 வது மாநிலம் ஹிமாச்சல் 1971:***

- ஹிமாச்சல் மாநில சட்டம் 1970 ல் யூனியன் பிரதேசமாக இருந்து 1971 ல் மாநிலமாக ஆனது

வடகிழக்கு மாநில மறுசீரமைப்பு சட்டம் 1971 :

- இந்த சட்டத்தின்படி 3 மாநிலம் மற்றும் 2 [ மிசோரம், அருணாச்சலப்பிரதேசம் ] யூனியன் பிரதேசம் உருவாக்கப்பட்டது

அவை : ***19 வது மாநிலம் மணிப்பூர் 1972. 20 வது மாநிலம் திரிபுரா***

***21 வது மாநிலம் மேகலாயா 1972 :***

- 23 வது சட்டத்திருத்தத்தின் படி அஸ்ஸாமின் துணை மாநிலமாக 1969 ல் பிரிக்கப்பட்டு 1972 ல் தனி மாநில அந்தஸ்து பெற்றது

**22 வது மாநிலம் சிக்கிம் 1975:**

- சிக்கிம் மாநில சட்டம் 1975 மற்றும் 36 வது சட்டத்திருத்தம் 1975ன் படி பிரிக்கப்பட்டது

***23 வது மாநிலம் மிசோரம் 1987 :***

- மிசோரம் மாநில சட்டம் 1986 ன் படி பிரிக்கப்பட்டது

***24 வது மாநிலம் அருணாச்சலப்பிரதேசம் 1987:***

- அருணாச்சலப்பிரதேசம் மாநில சட்டம் 1986 ன் படி பிரிக்கப்பட்டது

***25 வது ,மாநிலம் கோவா 1987:***

- கோவா 12 சட்டத்திருத்தம் 1962 ன் படி யூனியன் பிரதேசமாக இருந்து 1987 ல் தனி மாநிலம் ஆனது

***26 வது மாநிலம் சட்டிஸ்கர் 2000 நவம்பர் 1:***

- மத்தியப்பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டது

***27 வது மாநிலம் உத்ராஞ்சல் 2000 நவம்பர் 9:***

- உத்திரபிரதேசத்தில் இருந்து பிரிக்கப்பட்டது

***28 வது மாநிலம் ஜார்கண்ட் 2000 நவம்பர் 12***

- பீகார் மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டது




***29 வது மாநிலம் தெலுங்கானா 2014 :***

- ஆந்திரா மாநில மறுசீரமைப்பு சட்டத்தின்படி 2014 ஆந்திராவில் இருந்து தெலங்கானா தனி மாநிலமாக பிரிக்கப்பட்டது
- நடைமுறைக்கு வந்த நாள் : ஜூலை 2 - 2014
- பரிந்துரைத்த கமிட்டி : சிரி கிருஸ்ணா கமிட்டி

**PART II - குடியுரிமை [ விதி 5 -11 ] :**

**விதி 5 :**

- உறைவிடம் மூலம் குடியுரிமை பெறுதல்

**விதி 6 :**

- பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களுக்கான குடியுரிமை
- 19 - 7 - 1948 முன்னர் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்து திரும்ப செல்லாமல் இருந்து ஜூலை 19 பின்னர் வந்தால் பதிவு செய்ய வேண்டும். குறைந்தபட்சம் ஆறு மாதம் இந்தியாவில் இருக்க வேண்டும்.

**விதி 7 :**

- 1 - மார்ச் - 1947 பின்னர் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் சென்று மறுபடியும் இந்தியா வந்தவர்களுக்குகான குடியுரிமை

**விதி 8 :**

- பதிவு செய்து கொள்வது மூலம் குடியுரிமை பெறுதல்

**விதி 9 :** குடியுரிமை இழத்தல்

**விதி 10 :** குடியுரிமையை தொடர்தல்

**விதி 11 :**

- குடிவுரிமை சம்பந்தமாக ஏதாவது திருத்தும் கொண்டுவர பாராளுமன்றத்திற்கான அதிகாரம்

**குடியுரிமை பற்றிய கருத்துக்கள்**

- CITIZEN குடிமகன் என்ற சொல் சிவிஸ் [ CIVIS ] என்னும் இலத்தின் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.
- இதன் பொருள் பண்டைய ரோமாபுரியில் இருந்து நகர நாடுகளில் குடியிருப்பாளர் என்பதாகும்
- நகர நாடுகள் மறைந்தபின் இச்சொல் நாடுகளின் உறுப்பினர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது.

**அரிஸ்டாட்டில் கூற்று :**

- ***குடியுரிமை என்பது பிறப்பிடம் குடும்பம், பரம்பரை, மற்றும் பண்பாட்டை சார்ந்தது. எவர் ஒருவருக்கு விவாதங்களிலும் அரசின் நீதி நிர்வாக அமைப்பிலும் பங்கேற்க அதிகாரம் இருக்கிறதோ அவரே குடிமகன்***

***ஸ்டாயிக்குகன்:***

- ***வளர்ச்சியடைந்த பெரு நகரங்களில் வசிப்பவர்களுக்கே குடியுரிமை வழங்கப்பட வேண்டும்***

***கன்பூஷியஸ்:***

- ***பொது நலத்தை சீரமைத்து அதில் அனைவரும் தங்கள் நலனிற்காகவும் இணகத் சுழலுக்காகவும் பாடுபட வேண்டும்***

***இந்தியா:***

- இந்தியாவில் வசுதேவக் குடும்பம் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு இருந்தது. இதன் பொருள் ஒரே உலகம் ஒரே குடும்பம்

***அரசியலமைப்பு:***

- குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படி வசிக்கும் உரிமை
- குடியுரிமை இரண்டு வகைப்படும் அவை : ஒற்றைக்குடியுரிமை [ இந்தியா, இங்கிலாந்து ] 2] இரட்டை குடியுரிமை [ USA, சுவிட்சர்லாந்து ]

***ஒரு நாட்டில் குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகையினராக பிரிக்கலாம் அவை:***

1. ***அந்நியர் - ALIEN :***

- ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர். வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், மாணவர்கள் அனைவரும் அந்நியர்

2. ***குடியேறியவர் IMMIGRANT***

- ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும் பணி புரிவதற்கும் உரிமை பெரும் அந்நியர் குடியேறியவர் ஆவார்.

***இந்திய குடியுரிமை சட்டம் 1955 :***

- இந்த சட்டம் இந்திய குடியுரிமை பெற ஐந்து வழிகளையும் குடியுரிமையை இழக்க மூன்று வழிமுறைகளையும் கூறுகிறது
- முதலில் இந்த சட்டம் காமன்வெல்த் குடியுரிமையை வழங்கியது, பின்னர் 2003 ல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் காமன்வெல்த் குடியுரிமை நீக்கப்பட்டது
- இந்த சட்டம் இதுவரை எட்டு முறை திருத்தும் செய்யப்பட்டுள்ளது. [ 1957, 1960, 1985, 1986, 1992, 2003, 2005, 2015 ]

## குடியுரிமையை பெறுதல்

### *I] பிறப்பின் மூலம் குடியுரிமையை பெறுதல் [ BY BIRTH ]*

- 1950 சனவரி 26 முதல் 1987 ஜூலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருந்தாலும் அவர் பிறப்பால் இந்திய குடிமகன் ஆவார்
- 1987 ஜூலை 1 மற்றும் அதற்கு பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளின் பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- 2004 டிசம்பர் 3 மற்றும் அதற்க்கு பின் இந்தியாவில் பிறந்தவர்கள் பிறப்பால் இந்திய குடியுரிமை பெறுவார்
- ஆனால் பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாகவும் மற்றொருவர் சட்டவிரோதமாக இந்தியாவிற்க்குள் இடம்பெயர்ந்தவராக இருந்தல் கூடாது
- இந்த சட்டம் ***ஜஸ் சோலி அல்லது மண்ணின் சட்டம்*** என அழைக்கப்படும்

### *II] வம்சாவளியால் குடியுரிமை [ BY DESCENT ]*

- 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர் 10 க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும் அவருடைய தந்தை இந்திய குடிமகனாக இருந்தால் வம்சாவளி குடியுரிமை பெறுகிறார்
- 1992 டிசம்பர் 10 மற்றும் அதற்கு பின்னர் வெளிநாட்டில் பிறந்தவர்களின் பெற்றோரில் எவரேனும் ஒருவர் அச்சமயத்தில் இந்திய குடிமகனாக இருந்தால் அவர் இந்திய குடியுரிமையை பெறுகிறார்.
- 2004 டிசம்பர் 3 ம் நாள் முதல் வெளிநாட்டில் பிறந்தவர்கள் அவர்களுடைய பிறப்பினை ஒரு வருடத்திற்க்குள் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யவில்லை எனில் இந்திய வம்சாவளி குடிமகனாக முடியாது
- இந்தச்சட்டம் ***ஜஸ் சான்குயின் அல்லது ரத்தத்தின் சட்டம்*** என அழைக்கப்படும்

### *III ] பதிவின் மூலம் குடியுரிமை [ BY REGISTRATION ] :*

- இந்திய வம்சாவளியை சார்ந்த ஒரு நபர் எந்த நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமையை பெறலாம்
- இந்திய குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்

### *IV ] இயல்புக் குடியுரிமை [ BY NATURALISATION ]*

- எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதை தடுக்கும் பொருட்டு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது
- வெளிநாட்டு குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்புக் குடியுரிமை வழங்கப்படும்

- ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்தில் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்தில் அல்லது ஆண்டு முழுவதும் இந்தியாவில் தங்கியிருக்கும் பட்சத்தில் இக்குடியுரிமையை பெறுகிறார்
- நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பு அட்டவணை VIII ல் உள்ள ஏதேனும் ஒரு மொழியில் போதிய அறிவு பெற்றிருந்தால் இயல்புக் குடியுரிமை பெறலாம்

*V] பிரதேசங்களை இணைத்தல் [ BY INCORPORATION OF TERRITORIES ]*

- 1962 ல் பாண்டிசேரி மக்களுக்கு இந்தியக்குடியுரிமை வழங்கப்பட்டது போல் பிரதேசங்களை இணைக்கும் போது அங்கு வாழும் மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்

## *குடியுரிமையை இழத்தல் [ 3 வழிகள் ]*

*1] துறத்தல் [ RENNUCIATION ]*

- ஒருவர் வெளிநாட்டின் குடியுரிமையை பெரும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது

*2] முடிவுக்கு வருதல் [ TERMINATOPM ]*

- சட்டப்படி நடைபெறுதல்
- வெளிநாட்டு குடியுரிமையை பெற்றால் இந்திய குடியுரிமை தானாக முடக்கப்படும்

*3] குடியுரிமை மறுத்தல் :*

- கட்டாய முடிவுக்கு கொண்டு வருதல்
- மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அரசியலமைப்பு சட்டத்திற்க்கு புறம்பான செயல் ஆகியவற்றை செய்தால் குடிஉரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்க செய்யலாம்

## இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டு குடியுரிமையை பெற்றவர்கள்

### NON RESIDENT INDIAN [ வெளிநாடு வாழ் இந்தியர் ] :

- இந்திய கடவுசீட்டினை [ PASS PORT ] பெற்று வெளிநாட்டில் வசிக்கும் இந்திய குடிமகன்
- 2006 சனவரி முதல் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டது
- 2003 ல் L.M. சிங்வி பரிந்துரையின்படி 16 நாடுகளில் வாழும் இந்தியருக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டது
- 2003 ஜனவரி 9 யை பாரதிய பிரவாசி தினம் [ வெளிநாடு வாழ் இந்தியர் தினம் ] கொண்டாடப்படுகிறது
- 2011 முதல் வெளிநாடுவாழ் இந்தியருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது

### PERSON ON INDIAN ORIGIN :

- இந்திய பூர்விக குடியினர்
- இந்திய குடியுரிமை உடைய மூதாதையர்களை கொண்ட வெளிநாட்டில் குடியுரிமை பெற்றிருக்கும் நபர் இந்திய பூர்விக குடியினர் ஆவார்
- 2015 ஜனவரி 9 முதல் PIO முறை இந்திய அரசால் திரும்ப பெறப்பட்டு OCI [ OVERSEAS CITIZEN OF INDIA CARD HOLDER ] முறையுடன் இணைக்கப்பட்டது.

### OVERSEAS CITIZEN OF INDIA CARD HOLDER:

- வெளிநாட்டு குடியுரிமையை கொண்ட இந்தியாவில் வாசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர்கள்.
- இந்தியாவை பூர்விகமாக கொண்ட வெளிநாட்டு குடிமகன் காலவரையின்றி இந்தியாவில் வசிப்பதற்கும், பணி செய்வதற்கும் OCI அட்டை பெறுகிறார்
- இவர்களுக்கு இந்தியாவில் வாக்களிக்கும் உரிமை இல்லை

### MWPSC ACT 2007 :

- Maintenance and welfare of parents and senior
- வயதான பெற்றோர் முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் 2007
- சிறப்பு :
- பராமரிப்பு தீர்ப்பாயத்தை வளங்கியது [ maintenance tribunal ]
- யாரெல்லாம் தன் சொந்த வருமானத்தில் உடைமையின் மூலம் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமறிப்பின் கீழ் வருவார்கள்
- அதிகபட்ச பராமரிப்பு செலவாக 10,000 அளிக்க கட்டாயமாக்கப்பட்டுள்ளது
- இச்சட்டத்தின்படி வழக்கறினார்கள் தீர்ப்பாயத்தின் முன் எவருக்காகவும் வாதாட முடியாது
- முதியோர்களை கைவிடுபவர்களுக்கு 5,000 அல்லது 3 மாதம் சிறை அல்லது இரண்டும் தண்டனையாக வழங்கப்படும்.


LEADERS
IAS ACADEMY
Cell : 8489602106 , 8489702106
TNPSC
TNTET
RAILWAY
SSC
BANKING
POLICE
S.I
Computer Office
Automation ( COA )
Typing ( Tamil & English )
RITHWIN PLAZAA, PASUVANTHANAI MAIN ROAD,
OPP ESSAR BULK , RAJIV NAGAR, NEAR NADAR SCHOOL,
KOVILPATTI - 628501


LEADERS IAS ACADEMY
கோவில்பட்டியிலும்
100%
PASS
TNPSC குரூப் II -க்கான
அறிமுக வகுப்புகள் ஆரம்பம்